இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு தமது சொந்த ஊருக்கு வந்தார். அவருடைய சீடரும் அவரைப் பின்தொடர்ந்தனர். ஓய்வு நாள் வந்தபோது அவர் தொழுகைக்கூடத்தில் கற்பிக்கத் தொடங்கினார். ....... இயேசு அவர்களிடம், “சொந்த ஊரிலும் சுற்றத்திலும் தம் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப் பெறுவர்” என்றார். அங்கே உடல் நலமற்றோர் சிலர்மேல் கைகளை வைத்துக் குணமாக்கியதைத் தவிர வேறு வல்ல செயல் எதையும் அவரால் செய்ய இயலவில்லை. (மாற்கு 6:1,4-5)

# கிறிஸ்தவ ஒன்றிப்பு திருஅவையின் பிரதிநிதிகளுடன் திருத்தந்தை சந்திப்பு

**வத்திக்கான்:** கோவிட் பெருந்தொற்றை தொடர்ந்து வரும் காலத்தில் இவ்வுலகம் பல வழிகளில் இணைந்துவர வேண்டும் என்று எதிர்பார்க்கும் நாம், கிறிஸ்தவர்கள் நடுவிலும் ஒன்றிப்பும், ஒருங்கிணைப்பும் நிகழ்வது முக்கியம் என்பதை உணர வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன்னைச் சந்திக்க வந்திருந்த கிறிஸ்தவ ஒன்றிப்பு திருஅவையின் பிரதிநிதிகளிடம் கூறினார்.

கான்ஸ்டான்டினோபிளை தலைமைப்பீடமாகக் கொண்டிருக்கும் கிறிஸ்தவ ஒன்றிப்பு திருஅவையின் பிரதிநிதிகள், ஒவ்வோர் ஆண்டும், ஜூன் 29-ம் தேதி, திருத்தூதர்களான புனித பேதுரு, புனித பவுல் ஆகியோரின் திருநாளன்று, வத்திக்கானுக்கு வருகை தரும் மரபையொட்டி, இவ்வாண்டு வருகை தந்துள்ள பிரதிநிதிகள் குழுவை, திருத்தந்தை, ஜூன் 28, இத்திங்களன்று, திருப்பீடத்தில் சந்தித்தார்.

### மிக முக்கிய பாடம் - பணிவு

இந்த பெருந்தொற்றிலிருந்து மீண்டுவரும் நேரத்தில், நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கிய பாடம் பணிவு என்பதை, இச்சந்திப்பின்போது வலியுறுத்திக் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பணிவின்றி நாம் பயணித்தால், மீண்டும் பழைய தவறுகளை செய்வதற்கு வழியாகும் என்று எடுத்துரைத்தார்.ஒவ்வொரு நெருக்கடியும், நம்மை ஆழ்மன ஆய்வுக்கு இட்டுச் செல்கிறது என்று கூறிய திருத்தந்தை, கிறிஸ்தவ ஒன்றிப்பு என்ற பாதையில் நாம், நமது பாதுகாப்பு நிலைகளை விட்டு வெளியேறி, அடுத்தவரைச் சந்திக்கும் உள்ளத்தைப் பெறவேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.



கிறிஸ்தவ ஒன்றிப்பு திருஅவையின் பிரதிநிதிகளுடன் திருத்தந்தை பிரான்சிஸ் (Vatican Media)

### தனித்துவங்களும், வேற்றுமையில் ஒற்றுமையும

நம்மிடம் நிலவும் தனித்துவங்களை கொண்டாடும் அதே வேளையில், தூய ஆவியாரின் தூண்டுதல்களுக்கு செவிமடுத்து, நாம் வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பதற்கு முயலவேண்டும் என்பதை, திருத்தந்தை, கிறிஸ்தவ ஒன்றிப்பு திருஅவையின் பிரதிநிதிகளிடம் கூறினார். தன்னைச் சந்திக்க வந்திருந்த பிரதிநிதிகளுக்கு தன் நன்றியை வெளிப்படுத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அவர்கள் வழியாக, தன் சகோதரரான, கிறிஸ்தவ ஒன்றிப்பு முதுபெரும் தந்தை பார்த்தலோமேயு அவர்களுக்கு, தன் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார்.

### ஜூன் 29, நவம்பர் 30 சந்திப்புகள்

கிறிஸ்தவ ஒன்றிப்பு முதுபெரும் தந்தையின் சார்பாக, வத்திக்கானுக்கு வருகை தந்திருக்கும் தலைமை ஆயர் எம்மானுவேல், ஆயர் இயோசிஃப் மற்றும் புவனஸ் அயிரேஸ் கிரேக்க ஆர்த்தடாக்ஸ் தலைமை ஆயர் ஆகியோருடன் வருகை தந்த பிரதிநிதிகளை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சந்தித்து வாழ்த்தினார்.

ஜூன் 29ம் தேதி, திருத்தூதர்களான புனித பேதுரு, புனித பவுல் ஆகியோரின் திருநாளன்று, கான்ஸ்டான்டினோபிள் கிறிஸ்தவ ஒன்றிப்பு திருஅவையின் பிரதிநிதிகள் வத்திக்கானுக்கு வருகை தருவதும், நவம்பர் 30, திருத்தூதரான அந்திரேயா திருநாளன்று, உரோம் கத்தோலிக்க திருஅவையின் பிரதிநிதிகள் கான்ஸ்டான்டினோபிள் செல்வதும் ஒவ்வோர் ஆண்டும் நிகழ்ந்து வரும் மரபு.

*“நம்மிடம் நிலவும் தனித்துவங்களை கொண்டாடும் அதே வேளையில், தூய ஆவியாரின் தூண்டுதல்களுக்கு செவிமடுத்து, நாம் வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பதற்கு முயலவேண்டும்“*

*(திருத்தந்தை பிரான்சிஸ்)*

-

# தடுப்பூசி போட்டுகொள்வது அன்பின் செயல்

**கோலாலம்பூர்:** 2021-ஆம் ஆண்டின் இறுதிக்குள் 80 சதவீத மக்களுக்குத் கோவிட்-19 தொற்றுக்கு எதிரான தடுப்பூசி போட விரும்பும் மலேசிய அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு இணங்க, கோலாலம்பூரின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் தடுப்பூசிக்கு பதிவு செய்யக் கத்தோலிக்கர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இத்தடுப்பூசியின் அவசியம் குறித்து தெளிவான அழைப்பு இருந்தபோதிலும், பலருக்கு இன்னும் தடுப்பூசியொட்டிய தயக்கம் உள்ளது. அத்தகையோரில் சுபாங் ஜெயாவில் உள்ள புனித தோமஸ் மோர் பங்குத் தந்தை ரேய்மண்ட் பெரேரா ஒருவராவார். எந்த வகை தடுப்பூசி ஏற்பது எனும் குழுப்பத்தில் ஆழ்ந்திருந்த வேளையில், அவ்வட்டாரத்தில் அதிகரித்து தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை அதிகரிக்கவே, அவரும் உடனடியாகப் பதிவுச் செய்துகொண் டார்.

தடுப்பூசியைப் போட்டுக் கொண்டபின் அவர் எந்த பக்க விளைவுகளாலும் பாதிக்கப்படவில்லை. "நான் நலமுடன் உள்ளேன், நன்றாக தூங்க முடிகிறது," என்று அவர் கூறினார். அவரது இரண்டாவது தடுப்பூசி எதிர்வரும் ஜூலை 9-ஆம் தேதி திட்டமிடப்பட்டுள்ளது.

திருஅவை அருள்பணியாளர்கள் அனைவரும் நேரடியாகவும் மறைமுகமாகவும் சேவையில் ஈடுபட்டுள்ள முன்கள பணியாளர்கள் என்பதால், அவர்கள் அவசியமாக இத்தடுப்பூசியைப் போட்டுக் கொள்வது இன்றியமையாதது.

கோவிட்-19 தடுப்பூசிக்கு, அனைத்து மக்களும் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்வது மிகவும் முக்கியம். நாம் அடுத்திருப்பவரை அன்பு செய்கிறோம் என்பதுற்கு இது சிறந்த எடுத்துகாட்டு என்று அருள்-தந்தை அறிவுறுத்தினார்.






*முதல் தடுப்பூசியை ஏற்ற பேராயர் ஜூலியன் லியாவ் & அருள்தந்தை ரேய்மண்ட் பெரேரா*

## ‘தெ ஹெரால்டு’ வார இதழின் புதிய ஆசிரியர்

**கோலாலம்பூர் :** மலேசியக் கத்தோலிக்க வார இதழ் ‘தெ ஹெல்ட்டு’ இதின் புதிய ஆசிரியராக, கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் ஊடக உறவு அதிகாரியாகப் பணியாற்றிய செல்வி பெட்ரிஷா பெரேரா பொறுப் பேற்கிறார். 1996-ம் ஆண்டு ‘தெ ஹெல்ட்டு’ இதழில் செய்தியாளராக பணியைத் தொடங்கிய அவர், பத்தாண்டுகள் கழித்துப் பரந்த அனுபவத்தைப் பெற நிறுவனத்துறைக்குச் சென்றார். மீண்டும் தொழிற் பயிற்சியைத் தொடங்கிய மலேசியக் கத்தோலிக்க வார இதழுக்கே இப்போதுத் திரும்பியுள்ளார்.



அச்சு பத்திரிகையாக வெளிவந்த ‘தெ ஹெல்ட்டு’ இதழ், 2020-ஆம் ஆண்டு முதல் கோவிட்-19 தொற்றுப் பரவலைத் தொடர்ந்து ‘மின்-பத்திரிகையாக’ வெளிவந்து கொண்டிருக்கிறது. இந்த புதிய சூழலில் செல்வி பெட்ரிஷா தமது பணியை சிறப்பாக மேற்கொள்வார் என நம்புவோம்.

வருக பெட்ரிஷா!

*அருள்தந்தை லார்ன்ஸ் அன்ரு சே.ச*

# மலாக்கா-ஜோகூர் மறைமாவட்ட அருட்பணியாளர் கோவிட் தடுப்பூசி அனுபவ பகிர்வுகள்

**ஜோகூர் பாரு:** திருஅவை கத்தோலிக்க சமூக போதனைகளை நமக்கு வழங்கியுள்ளது. இந்த கத்தோலிக்க சமூக போதனைகள், இறை வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்ட நான்கு அடிப்படைக் கொள்கைகளை எடுத்துக் கூறுகிறது.

1. மனித மாண்பு மற்றும் மரியாதை.
2. பிறர் மீதான பொதுவான நலன்
3. ஒருவர் ஒருவரை சார்ந்து இருப்பது.
4. ஒற்றுமை.

தடுப்பூசி போட முடிவு செய்யும் போது, நாம் மேலே உள்ள திருஅவையின் நான்கு அடிப்படைக் கொள்கைகளில் 1, 2 மற்றும் 4 கொள்கைகளைத் தேர்வுச் செய்கிறோம். ஆகவே தடுப்பூசி போடப்படும் முன் கத்தோலிக்கர்களாகிய நாம் நமது இயற்கை, நன்னெறி மற்றும் நெறிமுறைச் சட்டங்களைப் பயன்படுத்த வேண்டும்.

தடுப்பூசிக்குச் செல்வது ஒருவரின் நம்பிக்கை அடிப்படையிலான அல்லது தனிப்பட்ட நம்பிக்கைகள் பற்றியது அல்ல. நாம் மற்றவர்களுடன் வாழ்வதால் தடுப்பூசியை ஏற்க வேண்டியுள்ளது. நாம் இறந்துவிட்டாலோ அல்லது நம்முடைய அன்புக்குரியவர்களை இழந்தாலோ நாம் கவலைப்பட மாட்டோம். ஆனால் நாம் தொடர்பு கொள்பவர்களும் அவர்களை சார்ந்து இருப்பவர்களையும் பாதுகாப்பது முக்கியமானதாகும்.

இதனால் நம் தனிப்பட்ட முடிவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மற்றவரின் வாழ்க்கைக்கும் நான் பொறுப்பு என்பதால் தடுப்பூசி ஏற்கினேன் என்றுணர்ந்து செயல்பட வேண்டும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கும் கூட தடுப்பூசி போடப்பட்டுள்ளது. தடுப்பூசி போட விரும்பாதவர்கள், எந்த வொரு கூட்டத்திலும் கலந்து கொள்ள முடியாமல் விலக்கி வைக்கப்படும்போதும், அவர்கள் வீட்டிலேயே பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தப்படும் போதும் அறிவுறுத்தலை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

“இந்த கோவிட்-19 பெருந்தொற்று உண்மை யானது. நான் ஒரு முறை அல்ல, மாறாக ஆறு முறை தடுப்பூசி போட்டுக் கொள்ளா மலிருக்க முயற்சி செய்தேன். இந்த கோவிட் (COVID) பெருந்தொற்று காரணமாக எனது பல நண்பர்களை இழந்திருக்கிறேன். பலர் பெருந்தொற்றுக்குப் பின் தற்போது கூட பல இன்னல் களுக்கு ஆளாகியுள்ளனர்.
(திருத்தொண்டர் *Dr Leslie Petrus, BDS Madras* )

ஜூன் 15 அன்று நான் முதல் அஸ்ட்ராஜெனெகா (AstraZeneca) தடுப்பூசியைப் பெற்றேன். மருத்துவமனை ஊழியர்களும் மருத்துவர்களும் மிகவும் நட்பாகவும் உதவியாகவும் இருந்தனர். எனது முதல் தடுப்பூசி எடுத்துக்கொள்ள எனக்கு 30 நிமிடங்கள் பிடித்தன. தடுப்பூசிக்குப் பிறகு எனக்கு எந்த பக்க விளைவுகளும் வரவில்லை. தடுப்பூசி பெற அனைவரையும் ஊக்குவிக்கிறேன்
*(அருள்தந்தை எட்வர்ட் இராயப்பன்)*

எனது தடுப்பூசிக்குப் பிறகு எனக்கு எந்த வலியும் ஏற்படவில்லை. அன்றைய தினம் சிறிது ஓய்வெடுத்தேன். இரண்டாவது நாளில் தான் நான் ஊசி போட்ட இடத்தில் சிறிது வலியை அனுபவித்தேன். எனவே, தடுப்பூசி போட்டுக்கொள்வதில் தயக்கம் காட்ட அவசியமில்லை. *(அருள் தந்தை பெனடிக்ட் யீ)*

நான் எதுவும் உணரவில்லை எனக்கு முற்றிலும் எவ்வித பாதிப்புகளும் இல்லை. எனவே, தடுப்பூசி எடுக்க அனைவரையும் ஊக்கு விக்க விரும்புகிறேன். இந்த தொற்றுநோயைத் தடுக்க வேறு எந்த மருத்துவத்தையும் நாடுவதைத் தவிரத்து தடுப்பூசி ஏற்பது சிறந்தது. *(ஓய்வுப்பெற்ற ஆயர் போல் தான்)*

ஆரம்பத்தில் நான் தயக்கம் காட்டினேன், தடுப்பூசிக்கு செல்ல தயங்கினேன். இறை வேண்டலோடு நண்பர்களின் ஆலோசனைகளையும் கேட்டேன். நான் தடுப்பூசி பெற்றபோது எந்த வலியும் இல்லை, ஆனால் இரண்டு நாட்கள் நான் சற்று சோர்வாகவும் தூக்க கலக்கத்திலும் இருந்தேன். அச்சம் தவிர்ப்போம். கடவுளின் ஆசீர் நமக்கு என்றும் உள்ளது. *(அருள் தந்தை தேவதாசன் மதலமுத்து)*

**'சமுதாய நட்பு' – திருத்தந்தையின் ஜூலை மாத இறைவேண்டல்**

**“சமுதாய, பொருளாதார மற்றும் அரசியல் சூழல்களில் மோதல்கள் இடம்பெறும் இத்தருணத்தில், உரையாடலையும், நட்பையும் கட்டியெழுப்பும் தீவிரமான, துணிவுள்ள முயற்சிகளில், ஆண்களும், பெண்களும், ஈடுபடவும், பகைமைக்கும், போருக்கும், இடம்தராத வண்ணம், அவர்கள், உதவிக்கரங்கள் நீட்டவும், நாம் இறைவேண்டல் செய்வோமாக”**

# அதிகரித்துவரும் தற்கொலை முயற்சிகளை முறியடிக்க முயற்சிப்போம்

**கோலாலம்பூர்:** இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களில் ஒவ்வொரு நாளும் சராசரி நான்கு தற்கொலை சம்பவங்கள் நடைபெறுகின்றன. இது கடந்த 2020-ஆம் ஆண்டு முழுவதும் காவல்துறையில் பதிவான 336 தற்கொலைகளில் பாதிக்கும் மேலானது என்று நாட்டின் மருத்துவ இயக்குநர் ஜெனரல் டாக்டர் நூர் ஹிஷாம் அப்துல்லா வெளியிட்ட அதிர்ச்சியூட்டும் புள்ளிவிவரம் கூறுகிறது. காவல்துறை கொண்டுள்ள புள்ளிவிபரம் படி, 2020-ல் நாட்டில் 631 தற்கொலை சம்பவங்கள் நிகழ்ந்ததாகவும், இதே சம்பவம் 2019-ல் 609 ஆக இருந்தது என்றும் மேலும் கூறினார்.

வெளித்தொடர்புகளிலிருந்து தனிமைப் படுத்தப்பட்டோரும், அதிகபடியான மனச் சோர்வுக்கு ஆளானோரும் மிக மோசமான மனவுளைச்சல்களுக்கு ஆளாகுகின்றனர். தற்கொலைக்கு வழிவகுக்கும் மனவுளைச் சலின் ஆரம்ப அறிகுறிகளைக் கண்டறிய பொதுமக்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவர்களைச் சுற்றியுள்ளவர்களைப் பற்றி மேலும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று நூர் ஹிஷாம் கேட்டுக்கொண்டார்

இதில் வழக்கமான நடத்தையில் மாற்றங்கள், நம்பிக்கையற்ற உணர்வை வெளிப்படுத்துதல் அல்லது அவர்கள் தங்கள் குடும்பத்திற்கு ஒரு சுமை போல உள்ளதாக உணர்வது மற்றும் வாய் மொழியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ தங்கள் வாழ்க்கையை முடிக்க விரும்புவதைப் பற்றி பேசுகிறது போன்ற ஆரம்ப அறிகுறிகளைக் கண்டறிய வேண்டும் என்று அறிவுறுத்தினார். தற்கொலைக்கு இட்டுச் செல்லும் இந்த முடிவை தீவிரமாக எடுத்துக்கொள்வதன் மூலமும், அவர்களின் குறைகளைக் கேட்பதன் மூலமும், அரவணைப்பை வெளிப்படுத்துவதன் மூலமும் பொது மக்கள் மனநலம் பாதிக்கப்பட்ட நபருடன் திறம்பட தொடர்பு கொள்ள முடியும் என்றார்.
மனநல உளவியல் வழிகாட்டி சேவைக்கு: 03-29359935 / 014-3223392 என்ற எண்களுடன் தொடர்புகொள்ள அழைப்பு டுத்தார்.

# திருச்சிக்குப் புதிய ஆயர்

வத்திக்கான்: அருள்பணி சவரிமுத்து ஆரோக்கிய ராஜ் அவர்களை தமிழ்நாடு, திருச்சி மறை மாவட்டத்தின் ஆயராக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஜூன் 29, செவ்வாயன்று நியமித்துள்ளார்.


புதிய ஆயர் சவரிமுத்து ஆரோக்கியராஜ் அவர்கள்

திருச்சி மறைமாவட்டத்தின் லாலாபேட்டை என்ற ஊரில் 1954ம் ஆண்டு அக்டோபர் 24ம் தேதி பிறந்த அருள்பணி சவரிமுத்து ஆரோக்கியராஜ் அவர்கள், பெங்களூருவிலும், பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிசிலும் கல்வி பயின்றுள்ளார்.

1981ம் ஆண்டு சனவரி 8ம் தேதி அருள் பணியாளராக திருநிலைப்படுத்தப்பட்ட இவர், சில பங்குத்தளங் களிலும், தமிழக ஆயர் பேரவையின் திருவழிபாட்டு பணிக்குழுவின் செயலராகவும், திருச்சி புனித பவுல் அருள்பணித்துவ பயிற்சிக் கல்லூரியின் அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.

திருச்சி மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் ஆன்டனி டிவோட்டா அவர்கள், 2018ம் ஆண்டு ஜூலை 14ம் தேதி பணி ஓய்வுப் பெற்றதைத் தொடர்ந்து, ஆயரின்றி இருந்த அம்மறைமாவட்டத்திற்கு, அதே மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருள்பணி சவரிமுத்து ஆரோக்கியராஜ் அவர்கள் புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஆயர் ஆன்டனி டிவோட்டா அவர்கள், 2019ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ம் தேதி இறைபதம் சேர்ந்தார்.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான் செய்திகள்*

# செல், சொல்! ஏற்போர் ஏற்கட்டும்!

ஆண்டின் பொதுக்காலத்தின் 14-வது ஞாயிறுவில் நாம் சந்திக்கிறோம். நாம் அனைவரும் வாழ்வில் சந்தித்திருக்கும், அல்லது, சந்திக்கவிருக்கும் அந்த வருத்தமான அனுபவத்தை இன்றைய ஞாயிறு வாசகங்கள் நினைவுறுத்துகின்றன. அந்த அனுபவம்... நிராகரிப்பு, புறக்கணிப்பு!
மனித அனுபவங்களிலேயே மிக ஆழமான காயங்களை உருவாக்குவது நிராகரிப்பு, புறக்கணிப்பு. அதிலும், காரணங்கள் எதுவும் இல்லாமல், அல்லது, நமக்குப் புரியாத காரணங்களுக்காக நாம் புறக்கணிக்கப் படும்போது, அந்த வேதனை மிகக் கொடுமையாக இருக்கும். தன் சொந்த ஊரிலேயே இறைமகன் இயேசு புறக்கணிக் கப்படுகின்றதை நாம் நற்செய்தியில் காண்கிறோம்.

இயேசு தமது சொந்த ஊரான நாசரேத்தூரில் தொழுகைக் கூடத்தில் போதிக்கிறார். மக்களோ அவரது ஆழ்ந்த ஞானத்தைக் கண்டு வியக்கின்றனர். எனினும் இவர் தச்சன் மகன் அல்லவா, இவர் தாயார் மரியாள் அல்லவா, இவரின் சகோதரரை நாம் அறிந்ததுதானே! என பலவாராக உறவு கொண்டாடுகின்றனர். அவருக்குள் மறைந்திருக்கும் மறை ஞானத்தை ஏற்க அவர்களால் முடிய வில்லை. அவர் கற்பித்த அறிவுரைகள், அற்புதங்கள் யாவும் மற்றவர்கள் செய்ய இயலாதவைகள்.

முதல் வாசகத்தில் எசேக்கியல் கூறுவது போல 'ஆண்டவர் என்னோடு பேசுகையில் ஆவி என்னுள் புகுந்து என்னை எழுந்து நிற்கச் செய்தது; அப்போது என்னோடு பேசியவற்றைக் கேட்டேன்' எனும் உயிருள்ள வார்த்தையில் நம்பிக்கை கொள்வோம். நாம் அனுப்பப்பட்ட தூதுரைக்கும் பணியில் முழு ஆன்மாவோடு, முழு உள்ளத்தோடு, முழு பலத்தோடு செயலாற்றுவோம்.

இஸ்ராயேல் வரலாற்றில் இறைவாகினர் இறுதியில் புறக்கணிக்கப்படுகின்றனர். உண்மையை ஏற்றுக் கொள்வது அவ்வளவு சுலபமல்லவே. இன்று நாம் காண்பது என்ன? உண்மைக்காகப் பாடுபடுவோர் துன்புறுகின்றனர்.மக்களை ஏமாற்றி பிழைப்போர் நலமாக வாழ்கின்றனர். இறைவனின் அழைப்பே போராட்டமும் புதிரும் நிறைந்ததுதான்.

அடுத்ததாக, நற்செய்தி அறிவிப்புப் பணியைச் செய்கின்றபோது, பணித்தளங் களில் இருப்பவர்கள் எப்படிப்பட்ட மக்களாக இருப்பார்கள் என்பதையும் முதல் வாசகம் எடுத்துச் சொல்கின்றது. கலகமும் கிளர்ச்சியும் செய்தல், வன்கண்ணும் கடின இதயமும் கொண்டவர்களாய் இருத்தல் இவையும் இதுபோன்ற காரியங்களும்தான் பணித்தளத்தில் நாம் சந்திக்கின்ற மக்களின் மனநிலையாக இருக்கின்றது. (சிலரை தவிர) இறைவாக்கினர் எசேக்கியேல் தான் இறை வாக்குப் பணியைச் செய்தபோது மக்களிடமிருந்து பல்வேறு விதமான எதிர்புகளைச் சந்தித்தார். மக்களால் அவமதிப்புக்கு உள்ளானார். இதுபோன்று இன்னும் பல்வேறு வகையான துன்பங் களைச் சந்தித்தார்.

இதிலிருந்து நாம் ஒன்றைக் கற்றுகொள் ளலாம். அதாவது நமது பணிகள், கடமைகள், நம் விருப்பு வெறுப்புக்களையும் தாண்டி அதற்கு அப்பால், மனிதரின் பிரிவுகள், தாழ்வு மனப்பான்மை, பெயரளவில் அறிந்தவர்கள், இப்படி பல வாறாக இறைபணிக்கு தடையாக அமை கின்றன.

எனவே, இறைப்பணியைச் செய்ய அழைக்கப்பட்டிருக்கும் நாம் எத்தகைய சவால்களையும் எதிர்த்து நின்று பணி செய்வோம். இறைவனின் அரசை இம்மண் ணில் கட்டி எழுப்புவோம். அதன்வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம்.

-ஆவி. டேவிட் , குளுவாங்

**பொதுக்காலம் 14-ஆம் ஞாயிறு**

எசே 2: 2-5
திபா 123: 1. 2. 3-4
2 கொரி 12: 7-10
மாற்கு 6: 1-6
ஞாயிறு வாசகம் -ஆண்டு 2
வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1
திருப்புகழ்மாலை - வாரம் 1